**மே – 07**

# TNPSC துளிகள்

- இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP) ஆனது, கடல் மட்டத்திலிருந்து 8,485 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள உலகின் ஐந்தாவது உயரமான சிகரமான மௌண்ட் மகாலுவில் வெற்றிகரமாக ஏறியுள்ளது.
- இந்திய அரசானது, இந்தியாAI திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட நாட்டின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மிகவும் பெரிய மொழி மாதிரியை (LLM) உருவாக்குவதற்காக வேண்டி பெங்களூருவில் உள்ள சர்வம் எனும் புத்தொழில் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- கர்நாடக அரசானது, பெங்களூருவின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஹெசராகட்டா என்ற புல்வெளிகளை "கிரேட்டர் ஹெசராகட்டா புல்வெளி வளங்காப்பகம்" ஆக அறிவித்து உள்ளது.
- மத்தியப் புலனாய்வு வாரியம் (CBI) ஆனது, அமெரிக்க நாட்டினால் தொடங்கப்பட்ட ஆபரேஷன் ஹாக் (Operation Hawk) நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில், சர்வதேசத் தொடர்புகளுடன் கூடிய இயங்கலை வழி சிறார் பாலியல் சுரண்டலில் ஈடுபடும் இணைய வெளிக் குற்ற வலையமைப்புகளை வெற்றிகரமாக அகற்றியுள்ளது.
- இந்திய விமானப்படையானது (IAF) உத்தரப் பிரதேசத்தில் உள்ள கங்கை விரைவுச் சாலையின் சுமார் 3.5 கிலோ மீட்டர் நீள வழித் தடத்தில், அதன் "தரையிறக்க மற்றும் மேலெழும்பும்" ஒத்திகையை மேற்கொண்டது.
    - இது 24 மணி நேரமும் இயங்கும் போர் விமான நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் விரைவுச் சாலையுடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட விமான ஓடுபாதையாகும்.
- உலகெங்கிலும் உள்ள மக்களின் புன்னகையையும் மகிழ்ச்சியையும் கொண்டாடச் செய்வதற்காக மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையானது (மே 04) உலக சிரிப்பு தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.


# தேசியச் செய்திகள்

## நகர்ப்புற நதிகளைப் புத்துயிர்ப் பெறச் செய்தல் திட்டம்

- தேசியத் தூய்மைக் கங்கைத் திட்டமானது (NMCG), நாடு முழுவதும் உள்ள பல்வேறு ஆறுகளின் ஓரங்களில் அமைந்துள்ள 145 நகரங்களுக்கான ஒரு செயல் திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- இத்திட்டமானது, அந்தந்த நதிகளின் வழித்தடங்களை / நீட்சிகளை வளமானதாகவும் நிலையானதாகவும் வைத்திருப்பதற்காக என்று 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்தியாவில் பாய்கின்ற நகர்ப்புற நதிகளைப் புத்துயிர் பெறச் செய்யும் ஒரு நோக்கில் 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நதி நகரங்கள் கூட்டணியின் (RCA) கீழ் இது உருவாக்கப் பட்டது.
- சமீபத்தில், இந்திய அரசானது யமுனை நதியைப் புத்துயிர் பெறச் செய்யும் நோக்கில் ஒரு விரிவான 30 அம்ச செயல் திட்டத்தையும் தொடங்கியுள்ளது.
- யமுனை நதியின் சுற்றுச்சூழல் சார் (நீரோட்டத்தின் அளவு, காலம், தரம்) ஓட்டத்தை

மேம்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

- வெள்ளப்பெருக்குப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக வேண்டி ஒரு பிரத்தியேக சிறப்புப் பணிக்குழு நிறுவப் பட்டுள்ளது.
- தற்போது நடைபெற்று வரும் முயற்சிகளை ஆதரிப்பதற்காக ஒரு பிரத்யேக "யமுனா கோஷ்" (யமுனா நிதி) நிறுவப்படும்.




## சர்க்கரை விலை (கட்டுப்பாட்டு) குறித்த ஆணை, 2025




- இந்திய நாட்டு அரசானது, சர்க்கரை விலை (கட்டுப்பாட்டு) குறித்த 1966 ஆம் ஆண்டு ஆணையினை மறுமதிப்பீடு செய்து, 2025 ஆம் ஆண்டு சர்க்கரை விலை (கட்டுப்பாட்டு) குறித்த ஆணையினை உருவாக்கியுள்ளது.
- உணவு மற்றும் பொது விநியோகத் துறையின் (DFPD) தளமானது சர்க்கரை ஆலை நிறுவனங்களின் வள திட்டமிடல் (ERP)/ அமைப்புகள், செயலிகள் மற்றும் தயாரிப்புகள் (SAPAs) ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்படும்.
- கட்டுப்பாட்டு ஆணையில் கச்சா சர்க்கரையும் சேர்க்கப்பட்டு, இந்த நாடு முழுவதும் உற்பத்தி செய்யப்படும் மொத்தச் சர்க்கரை இருப்புகளுக்கும் இந்த விலை குறித்த ஒரு ஆணையானது பரிசீலிக்கப்படும்.
- ஒரு நாளைக்கு சுமார் 500 டன்னுக்கும் (TCD) அதிகளவிலான உற்பத்தித் திறன் கொண்ட (கரும்பு நொறுக்கும் திறன்) கந்தசாரி ஆலைகள் 2025 ஆம் ஆண்டு சர்க்கரை விலை குறித்த கட்டுப்பாட்டு ஆணையில் சேர்க்கப்பட்டுள்ளன.
- கரும்பிலிருந்துச் சர்க்கரை உற்பத்தியைப் பாதிக்கும் பல்வேறு வகையான துணைப்

பொருட்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

- சர்க்கரை விலை (கட்டுப்பாடு) தொடர்பான புதிய உட்பிரிவு ஆனது சர்க்கரை விலைக் கட்டுப்பாட்டு ஆணையில் இணைக்கப்பட்டுள்ளது.
- எனவே தனித்தனி சர்க்கரை விலை (கட்டுப்பாடு) ஆணை இருக்காது.
- தற்போதுள்ள 2018 ஆம் ஆண்டு சர்க்கரை விலை (கட்டுப்பாடு) ஆணையில் சர்க்கரை விலை (கட்டுப்பாடு) ஆணை தொடர்பான பல்வேறு விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இந்தியாவில் MSME நிறுவனங்களின் போட்டித் தன்மையை மேம்படுத்துதல்

- நிதி ஆயோக் அமைப்பானது, போட்டித்திறன் நிறுவனத்துடன் (IFC) இணைந்து "இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் (MSME) போட்டித் தன்மையை மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலான ஒரு மிகவும் விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பட்டியலிடப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெறும் குறு மற்றும் சிறு நிறுவனங்களின் பங்கு 14 சதவீதத்திலிருந்து 20% ஆக உயர்ந்தது.
- இதில் நடுத்தர நிறுவனங்களின் பங்கு 4 சதவீதத்திலிருந்து 9% ஆக உயர்ந்தன.
- MSME நிறுவனங்களின் கடன் தேவையில் சுமார் 19% மட்டுமே 2021 ஆம் ஆண்டிற்குள் முறையான வழிகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், தோராயமாக 80 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான அவற்றின் தேவை பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது.

| MSME obstacles/challenges | India | South Asia | All countries |
|---|---|---|---|
| Biggest Obstacle | Access to Financial Sources (21.5%) | Political Instability (17.9%) | Access to Financial Sources (15.3%) |
| Gender Representation (enterprises having female ownership participation) (%) | 3.9% | 13.8% | 32.9% |
| Annual Labour Productivity Growth (%) | -4.3% | -3.1% | -2.8% |
| Real annual sales growth (%) | -1.5% | 0.8 | 0.7 |
| Innovation and Technology (firms globally introduce new products or services) (%) | 5.8% | 24.9% | 36% |
| Customs (number of days to clear direct exports and imports from customs) | Exports - 17.3 days Imports - 31.5 days | Exports – 12 days Imports – 7.4 days | Exports – 14.1 days Imports – 12.3 days |

## டிப்போட் தர்பன் இணைய தளம்

- இந்த மாதம் "டிப்போட் தர்பன்" (கிடங்கக அமைப்பு) இணைய தளம் மற்றும் கைபேசி செயலி வெளியிடப்பட உள்ளது.
- உணவுச் சேமிப்புக் கிடங்குகளை நிகழ்நேரத்தில் கண்காணித்து, அவை தரம் மற்றும் பாதுகாப்பின் மிக உயரிய தரநிலைகளைக் கடைபிடிப்பதை உறுதி செய்கிறது.
- இது கிடங்கக மேலாளர்களுக்கு உள்கட்டமைப்பு, செயல்பாட்டுத் திறன் மற்றும் நிதி செயல்திறனை நிகழ்நேரத்தில் கண்காணிக்க அதிகாரம் அளிக்கும்.
- கிடங்கக உள்கட்டமைப்பில் புவிசார் குறியிடப்பட்ட தரவைப் பதிவேற்றுவதன் மூலம், மேலாளர்கள் தானியங்கு வழி மதிப்பீடுகள் மற்றும் மிகவும் சரியான நேரத்திலான

மேம்பாடுகளுக்கான நடவடிக்கை எடுக்கக் கூடிய தகவல்களைப் பெறுவார்கள்.

- இந்த முன்னெடுப்பானது, தோராயமாக சுமார் 2,278 கிடங்குகளை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இதில் இந்திய உணவுக் கழகம் (FCI), மத்தியக் கிடங்குக் கழகம் (CWC) மற்றும் அரசு நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களிலிருந்துப் பெறப்பட்டவை ஆகியவை அடங்கும்.




## சர்வதேசச் செய்திகள்

### VoTan – UNOCT





- ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகம் (UNOCT) ஆனது, கொடும் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சங்க வலையமைப்பை (VoTAN) தொடங்கி உள்ளது.
- இது தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் முதல் உலகளாவிய ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டின் முக்கிய விளைவாகும்.
- இந்த ஒரு முன்னெடுப்பானது, உலகளவில் உள்ள பாதிக்கப்பட்டவர்களின் சங்கங்கள் இடையே வலுவான ஒத்துழைப்பை வளர்க்க முயல்கிறது.
- இது ஆதரவினை மேம்படுத்துவதோடு, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும்

தேவைகள் ஆனது தீவிரவாத எதிர்ப்பு முயற்சிகளின் ஒரு மையமாக இருப்பதை உறுதி செய்யும்.

### கருவுறுதல் விகிதத் தேவை 2025

- மனிதகுல அழிவைத் தடுப்பதற்காக என்று, வளர்ச்சியடைந்த நாடுகளில் கருவுறுதல் விகிதம் ஒரு பெண்ணுக்கு குறைந்தது 2.7 குழந்தை பிறப்புகளாக இருக்க வேண்டும்.
- ஒரு பெண்ணுக்கு 2.1 குழந்தைகள் என்ற வழக்கமான கருவுறுதல் மீட்சி அளவு (RLF) ஆனது உலகின் பல பகுதிகளில் போதுமானதாக இல்லை.
- இருப்பினும், ஆண் குழந்தைகளை விட மிக அதிகமான பெண் குழந்தைகள் பிறக்கும் அதிக பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் ஆனது, அழிவின் அபாயத்தைக் குறைத்து, காலப்போக்கில் அதிகமான வம்சாவளியினர் உயிர்வாழ உதவுகிறது.
- உலக நாடுகள் 1960 ஆம் ஆண்டுகளில் அதன் உச்சக் கட்ட வளர்ச்சி விகிதத்தை எதிர் கொண்டது என்பதோடு தொடர்ந்து அதிகரித்து வருகின்ற இந்த உலக மக்கள் தொகை என்பது, மேலும் 2030 ஆம் ஆண்டில் 8.5 பில்லியனை எட்டும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.
- உலகில் 6,700க்கும் மேற்பட்ட பேசப்படும் மொழிகளில் குறைந்தது 40 சதவீதம் ஆனது அடுத்த 100 ஆண்டுகளுக்குள் மறைந்து விடும் அபாயத்தில் உள்ளது.




## பொருளாதாரச் செய்திகள்

### 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி


- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியானது வரலாற்றுச் சிறப்பு மிக்க வகையில் 824.9 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, முந்தைய ஆண்டின் மொத்த ஏற்றுமதியான சுமார் 778.1 பில்லியன் டாலரை விட 6.01 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- சேவைகள் ஏற்றுமதியானது, ஆண்டிற்கு 13.6 சதவீதம் அதிகரித்து, இதுவரை இல்லாத அளவிற்கு 387.5 பில்லியன் டாலரை எட்டியுள்ளது.
- வணிகப் பொருட்களைப் பொறுத்தவரை, 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியா 437.4 பில்லியன் டாலருக்கும் அதிகமானப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

- இதில் பெட்ரோலியம் சாராத பிற பொருட்களின் ஏற்றுமதியானது பிற பொருட்களின் ஏற்றுமதியை விட அதிகமாக சுமார் 374.08 பில்லியன் டாலர் என்ற சாதனை அளவினை எட்டியுள்ளது.




## 2025 ஆம் நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க இருப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் நிதியாண்டில் சுமார் 57.5 டன் தங்கத்தினை வாங்கியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தங்கத்தினைத் திரட்டுவதற்கு தொடங்கிய பிறகு, எந்தவொரு நிதியாண்டிலும் மத்திய வங்கி வாங்கிய இரண்டாவது அதிகபட்ச தங்கம் இதுவாகும்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் மொத்த தங்க இருப்பு 879.6 டன்களை எட்டியது.
- இது முந்தைய ஆண்டின் இதே காலக் கட்டத்தில் 822.1 டன்களாக இருந்த அளவிலிருந்து அதிகரித்துள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஐரோப்பிய சிவப்பு அட்மிரல் வண்ணத்துப்பூச்சி

- பரவலாகப் பரவியுள்ள இடம் பெயரும் ஒரு வண்ணத்துப்பூச்சி இனமான ஐரோப்பிய சிவப்பு அட்மிரல் (வனேசா அட்லண்டா), இமாச்சலப் பிரதேசத்தில் தென்பட்டுள்ளதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

- தௌலதார் மலைத்தொடரில் உள்ள தர்மசாலை அருகே இந்த இனம் தென்பட்டுள்ளது என்பதுடன், இது நாட்டில் அதன் முதல் தோற்றத்தைக் குறிக்கிறது.
- இதன் மூலம், இமாச்சலப் பிரதேசத்தில் ஆவணப்படுத்தப்பட்ட மொத்த வண்ணத்துப் பூச்சி இனங்களின் எண்ணிக்கை 440 ஆக உயர்ந்துள்ளது.
- இந்த ஐரோப்பியச் சிவப்பு அட்மிரல் இனமானது, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா முழுவதும் அதன் விரிவான இடம்பெயர்வுச் செயல்பாடுகளுக்கு நன்கு அறியப்பட்டது ஆகும்.
- இந்தியாவில் இது முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத போதிலும், முன்னதாக மத்திய மற்றும் தெற்காசியாவின் சில பகுதிகளில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.
- தெற்காசியாவில் 1929 ஆம் ஆண்டில் பலுசிஸ்தானில் அதன் கடைசிப் பதிவு உறுதிப் படுத்தப் பட்டது.
- பின்னர், 93 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் லோயர் சித்ரல் பகுதியில் இது மீண்டும் தென்பட்டது.




## வனவிலங்கு நீதி ஆணைய அறிக்கை




**Figure 1:** Significant seizures of pangolin scales and ivory, from 2015 to 2024.

- உலக வனவிலங்கு நீதி ஆணையமானது, "இடையூறு மற்றும் குழப்பம்: எறும்புத் தின்னிகளின் எண்ணிக்கை மற்றும் தந்த கடத்தல் பற்றியப் பகுப்பாய்வு 2015–2024" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- இதில் எறும்புத் திண்ணிகளின் செதில்கள் மற்றும் யானை தந்தங்களின் உலகளாவிய கடத்தல் 2020 ஆம் ஆண்டு முதல் அதிகளவில் குறைந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், உலகளவில் பறி முதல் செய்யப்பட்ட எறும்புத் திண்ணிகளின் செதில்கள் 100 டன்களுக்கும் அதிகமான அளவினை எட்டின.
- அந்த ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்ட யானை தந்தங்களும் 50 டன்களாக உயர்ந்தன.
- 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளவில் 370 டன்களுக்கும் அதிகமான எறும்புத் திண்ணி செதில்கள் கைப்பற்றப்பட்டன.
- 2024 ஆம் ஆண்டில், கைப்பற்றப்பட்ட எறும்புண்ணி செதில்கள் மற்றும் தந்தங்களின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டதை விட முறையே சுமார் 84 சதவீதம் மற்றும் 74 சதவீதம் குறைந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## மாநிலங்களுக்கிடையிலான சிவிங்கிப் புலிகள் வளங்காப்பு வழித்தடம்




- இராஜஸ்தான் மாநிலமானது, தற்போது மத்தியப் பிரதேசத்தில் செயல்பாட்டில் உள்ள இந்தியாவின் முதல் சிவிங்கிப் புலிகள் மறு அறிமுகத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாற உள்ளது.
- இது 17,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான ஒரு வனவிலங்கு வழித் தடமாகும்.
- இரு மாநிலங்களிலும் உருவாக்கப்பட உள்ள இது சிவிங்கிப் புலிகள் பாதுகாக்கப்பட்ட மற்றும் இணைக்கப்பட்ட வாழ்விடத்தில் சுதந்திரமாக சுற்றித் திரிய வழி வகுக்கிறது.
- இந்த வழித்தடம் ஆனது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பால்பூர் குனோ தேசியப் பூங்கா மற்றும் காந்தி சாகர் சரணாலயத்தினை இராஜஸ்தானில் உள்ள முகுந்தரா மலைகள் புலிகள் வளங்காப்பகத்துடன் இணைக்கும்.

## செயற்கை நுண்ணறிவில் இயங்கும் நிகழ்நேர வன எச்சரிக்கை அமைப்பு

- மத்தியப் பிரதேச வனத்துறையானது, காடழிப்பை எதிர்த்துப் போராடுவதற்காக என

செயற்கை நுண்ணறிவில் இயங்கும் ஓர் எச்சரிக்கை அமைப்பைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

- இது இந்தியாவில் இந்த மாதிரியிலான முதல் அமைப்பாகும்.
- இந்த நிகழ்நேர வனத்திற்கான எச்சரிக்கை அமைப்பானது, சிவபுரி, குணா, விதிஷா, புர்ஹான்பூர் மற்றும் காண்ட்வா ஆகிய மாவட்டங்களில் ஒரு சோதனைத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.
- மேகக்கணிமையின் அடிப்படையிலான அமைப்பான இது, செயற்கைக்கோள் தரவு, இயந்திர கற்றல் படிமுறைகள் மற்றும் நிகழ்நேரக் களக் கருத்துரைப்புகளை மிகவும் நன்கு ஒருங்கிணைத்து வனப்பகுதிகளை முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு துல்லியத்துடன் கண்காணிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டு இந்திய வன ஆய்வு அறிக்கையின்படி, மத்தியப் பிரதேசம் 85,724 சதுர கி.மீ. பரப்பளவில் மிகப்பெரிய காடு மற்றும் மரங்கள் கொண்ட ஒரு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.
- மத்தியப் பிரதேசமானது, சுமார் 612.41 சதுர கிலோ மீட்டர் வனம் சார் நிலத்தை அதிக அளவில் இழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.




## காகர் நடவடிக்கை


- மத்திய அரசானது, நக்சல் அமைப்புகளை அழிப்பதற்கும், மாவோயிசத்தின் அரசியல் சித்தாந்தத்தை அகற்றவும் 2024 ஆம் ஆண்டில் காகர் என்ற ஒரு நடவடிக்கையினைத் தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் சத்தீஸ்கரில் சுமார் 140க்கும் மேற்பட்ட மாவோயிஸ்டுகள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் நக்சல்களை ஒழிக்க இலக்கு நிர்ணயித்து, நக்சல் அமைப்புகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதை நோக்கி மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.
- தெலுங்கானா மற்றும் சத்தீஸ்கரைப் பிரிக்கும் மலைத்தொடர் 'கரேகுட்டா' மற்றும்

'பிளாக் ஹில்ஸ்' ஆகும்.

❖ 5000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள வசிக்க முடியாத இந்த மலைகள் ஆனது, மிகவும் பெரும்பாலான உள்ளூர் மக்களால் கூட அணுக முடியாததாகவே உள்ளன.

❖ மாவோயிஸ்டுகள் ஒரு காலத்தில் இங்கிருந்து தான் அவர்களின் நடவடிக்கைகளைத் தொடர்ந்ததாகக் கருதப்படுகிறது.

❖ சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒடிசா, மகாராஷ்டிரா மற்றும் பீகார் உள்ளிட்ட பல இந்திய மாநிலங்களின் சில பகுதிகளை உள்ளடக்கிய "சிவப்பு வழித் தடம் (Red Corridor)" நக்சல் இயக்கம் மிகவும் தீவிரமாக செயல்பாட்டில் உள்ளது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேசத் தீயணைப்பு வீரர்கள் தினம் 2025 - மே 04





❖ பேரழிவுகளிலிருந்துச் சமூகங்களைப் பாதுகாப்பதற்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் துணிச்சலான ஆண்கள் மற்றும் பெண்களைக் கௌரவிப்பதற்காக இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.

- மே 04 ஆம் தேதியானது தீயணைப்பு வீரர்களின் பெரும் புரவலர் துறவியான புனித புளோரியனின் விழா நாள் என்பதால் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- தீயணைப்பு படைகளை நன்கு ஒழுங்கமைத்த ஒரு ரோமானிய அதிகாரியான அவர் உயிர்களைப் பாதுகாப்பதில் அவரது தைரியம் மற்றும் அர்ப்பணிப்புக்காக நினைவு கூரப் படுகிறார்.
- 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று, ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவைச் சேர்ந்த 5 ஜீலாங் மேற்கு தீயணைப்பு படை உறுப்பினர்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்தனர்.
- இந்த கொடூரமான நிகழ்வின் விளைவாக இந்த நாள் நிறுவப்பட்டது.

# இதரச் செய்திகள்

## ஃபோர்ப்ஸ் இதழின் W-POWER பட்டியல் 2025

- ஃபோர்ப்ஸ் இந்தியா இதழானது, லோரியல் பாரிஸ் நிறுவனத்துடன் இணைந்து, 2025 ஆம் ஆண்டு W-power பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இது கருத்தாக்கங்களை நிறுவனங்களாகவும், சவால்களைச் செயலாக்கிகளாகவும், தடைகளை மாற்றத்திற்கான திட்டமாகவும் மாற்றியவர்களைப் பட்டியலிடுகிறது.
- கீதா கோபிநாத், லீனா நாயர், ஸ்மிருதி மந்தனா, P.V. சிந்து, மனு பாக்கர் மற்றும் பலர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★